(இ) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் விதிக்கப்படும் பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பான விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் உட்பட்டவராவார். அவர் அவற்றை மீறுவாராயின், பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உரியவராவார். பரீட்சையை நடாத்துவது மற்றும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது ஆகியன தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் தீர்மானங்களே இறுதியானவையாகும்.

(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள்.- ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்கும் குறையாது புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளது பெயர்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணை ஆனது தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறு அறிவிக்கப்படுவதுடன், www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கான அனுமதிப்பத்திரமொன்றை விண்ணப்பதாரி ஒருவருக்கு வழங்குதலானது அவ்விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் கொண்டுள்ளார் என்றோ அல்லது அவர் இப்பதவிக்கான தகுதிகளையும் கொண்டுள்ளார் என்றோ கருதமுடியாது.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக அப்பரீட்சையின் பிரதான மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முகம், காதுகள் என்பவற்றை மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்துள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறும் வரை பரீட்சார்த்தி முகத்தையும் காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

14. பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.- விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் என்பது தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த எந்தவொரு பிழையான விடயமும் அவரால் தெரிந்துகொண்டே சமர்ப்பிக்கப்பட்டது. அல்லது தேவையான ஒரு விடயம் அவரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டது என்பது தெரியவந்தால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

15. தொழில் அலுவலர் பதவிக்கான ஏதாவது வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாமல் விடுவதற்கும், இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்படாது விட்ட ஏதாவது விடயம் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்வதற்கும் தொழில் ஆணையாளர் அதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

16. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

பி. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
தொழில் ஆணையாளர் அதிபதி.

தொழில் திணைக்களம்,
தொழில் செயலகம்,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05,
2021.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தின் தொழில் அலுவலர் - II பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021**

**Limited Competitive Examination for the Recruitment to the Post of Labour Officer - II in the Department of Labour - 2021**

01. மொழி :
பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி : சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

விண்ணப்பப்படிவமானது பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமே நிரப்பப்படுதல் வேண்டும்.

02. தனிப்பட்ட தகவல்கள் :
2.1 முதலெழுத்துக்கள் பின்னால் வரத்தக்கதாக முதலெழுத்துக்களுடன் பெயர் :
..........................................................................................................................
(ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) (உ-ம் : SILVA A. B. D. P. A.)
2.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ..........................................................................
..........................................................................................................................
2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................

03. 3.1 அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்துக்களில்) (அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கே தபாலில் அனுப்பப்படும்) :..........................................................................
3.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................
3.3 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................
..........................................................................................................................

04. பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

05. தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

06. தொலைபேசி இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

07. விவாக அந்தஸ்து : (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.) ☐

08. இனம் : (சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையவர் -5)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.) ☐

09. 9.1 பிறந்த திகதி :

வருடம் : | | | | |  மாதம் : | | |  திகதி : | | |

9.2 2021.12.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : | | |  மாதங்கள் : | | |  நாட்கள் : | | |

10. நீர் 2021.12.31 ஆந் திகதியன்று சேவையில் சேர்ந்த பதவிக்கு/ சேவைக்கு/ தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதற்காக தகைமையைப் பெற்றுக்கொண்ட பரீட்சை/நேர்முகப் பரீட்சை சித்தியடைந்த மொழிமூலத்தைக் குறிப்பிடுக : .................... ....................................................

11. 2021.12.31 ஆந் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டள்ளனவா? ............................................................

12. கல்வித் தகைமைகளும் அனுபவமும்:
12.1 பட்டம் :................................................
12.2 பல்கலைக்கழகம்/நிறுவனம் :...................................
12.3 தேர்ச்சி (விசேட வகுப்புகள் ஏதும் பெற்றிருப்பின், குறிப்பிடுக.) :...........................................
12.4 பட்டம் பெற்ற திகதி :.......................................
12.5 பட்டம் பெற்ற மொழி மூலம் :..........................................
12.6 வழக்கறிஞராக உயர் நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :.........................................
(உரியதாயின் மாத்திரம் குறிப்பிடுக.)

13. அனுபவம் :
13.1 பரீட்சைக்குத் தகைமை பெறுவதற்கான சேவையை/ தரத்தை (வகுப்பு, தரம் அல்லது பிரிவு ஏதும் இருப்பின்) குறிப்பிடுக :................................................
13.2 தற்போது வகிக்கும் பதவி :...................................
13.3 அப்பதவி அரசாங்க சேவைக்குரியதா அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரியதா? :...........................................
13.4 தரம் :.......................................
13.5 வகுப்பு/பிரிவு :..........................................
13.6 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :.........................................
13.7 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :..........................................
13.8 சம்பளப் பிரிவின் இலக்கம் :.........................................
13.9 சம்பள அளவுத்திட்டம் :.........................................
13.10 விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றமைக்கு பல சேவைகள் இருக்குமாயின், அவ்வாறான தரங்களும் திருப்திகரமான சேவைக்காலங்களும் பற்றி பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக :.........................................

| சேவையின்/தரத்தின் பெயர் | உரிய அரச நிருவாகச் சுற்றறிக்கையின்படி சம்பளப் பிரிவின் இல. (உதா : MN-1-2016) | நியமனத் திகதி | நிரந்தரமாக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (1) .................................. | ........................................ | ....................................... | .................................... |
| (2) .................................. | ........................................ | ....................................... | .................................... |
| (3) .................................. | ........................................ | ....................................... | .................................... |
| (4) .................................. | ........................................ | ....................................... | .................................... |

13.11 வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பகுதியின் நிபந்தனைகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட பதவியில் 2021.12.31 ஆந் திகதியன்று முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் :.................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :
14.1 செலுத்திய தொகை :................................................
14.2 பணம் செலுத்திய தபால் /உப தபால் அலுவலகம் :................................................

14.3 செலுத்திய திகதி :.................................................

14.4 பற்றுச்சீட்டு இலக்கம் :.................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை இலகுவில் அகற்ற முடியாத வகையில் அதன் ஒரு ஓரத்தில் இங்கே ஒட்டுக. (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் உபயோகமானது.) |

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

2021.12.31 ஆந் திகதியில் முடிவுற்ற ஐந்து வருட காலப்பகுதியினுள் எல்லாச் சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றுள்ளேன் எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 ஆம் பகுதியின் பிரகாரம் 2021.12.31 ஆந் திகதியில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைக் கொண்டுள்ளேன் எனவும், (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

நான், வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான தகைமைகளைக் கொண்டுள்ளேன் எனவும், விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணத்திற்கான ............ ஆம் இலக்க .......................... ஆந் திகதிய பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன். பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளுக்கு இணைந்து நடப்பேன் எனவும், இப்பரீட்சைக்கான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவராக இருந்தால், பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாகும் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக மற்றும் பரீட்சை முடிபுகள் வெளியிடுவது தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் ஒழுங்குவிதிகள் யாவற்றுக்கும் இணங்கியொழுகச் சம்மதிக்கிறேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின்பிரிவு 10 (ஈ) இன் பிரகாரம்) :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................................... (விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் ......................... ஆந் திகதியன்று தனது கையொப்பத்தை என்முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரது முழுப் பெயர் :.................................................
பதவி : .............................................................
முகவரி :..............................................................
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

17. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பதாரியின் பெயர் வழிக் கோவையின் பிரகாரம்) :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் (திரு./ திருமதி/ செல்வி ............................................................... என்பவர் மத்திய அரசாங்க/மாகாண அரசாங்க .......................... என்னும் அமைச்சின்/திணைக்களத்தின் ............................ என்னும் பதவியில் சேவை புரிகிறார் எனவும் 2021.12.31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஐந்து வருட காலத்தினுள் அவரது சம்பள உயர்வுகளை உழைத்துப் பெற்றுள்ளனர் எனவும், வர்த்தமானி அறிவித்தலின் 2.1 ஆம் பகுதியின் பிரகாரம்.................. வருடங்கள் (ஐந்து/பத்து) முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும்

உரிய வர்த்தமானி அறிவித்தலின்படி உரிய ஒழுங்குவிதிகளுக்கமைவாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலரின் கையொப்பம்.

திகதி :..................................................
பெயர் :..................................................
பதவிப்பெயர் : .............................................................
(உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்)

*11-735*

---

## வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

*அரசாங்க தொழிற்ச்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சாரா/ தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் கனிய அளவை உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021*

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2022, மாசி மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கனிய அளவை உதவியாளர் | 02 |

1. **சம்பளம் .-**

1.1 சம்பளக் குறியீட்டு இல. : MN 3-2016
1.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 31,040.00 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550.00

2. **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம்.-** தரம் III

3. **கல்வித் தகைமைகள்.-**

* சிங்களம்/ தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

* கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சையில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடவிதானத்தின் கீழ் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்.)

4. **தொழில்சார் தகைமைகள்.-** தொழில் மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற தொழில்நுட்பக் கல்லூரியொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் திறமை (NVQ) ஐந்து (05) அல்லது ஆறு (06) மட்டத்தில் உள்ளடங்கும் தேசிய தொழில்நுட்ப (கனிய அளவை) சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5. **அனுபவம்** .- குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்சார் நிறுவனமொன்றில் இரண்டு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாக இருக்கும்.

6. **உடல்சார் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவிலான உடல் மற்றும் உளரீதியான தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7. **வேறு தகைமைகள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தமைகளையும் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரி குறித்த தகைமைகள் மற்றும் உரிய வயதெல்லையை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.

8. **வயது**.-

8.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வயதுக்கு குறையாதிருத்தல்.
8.2 உச்ச வயதெல்லை : 30 வயதுக்கு மேற்படாதிருத்தல்.
(அதற்கமைய 2003.12.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.12.12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்துள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

9. **ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறை**.- எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் தேர்ச்சி ஒழுங்குவரிசைக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, பொதுவான நேர்முகப் பரீட்சை மூலம் தகைமைகள் பரிசோதிக்கப்பட்டு பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படுவார்கள்.

10. **பரீட்சை**.-

10.1 எழுத்து மூலப் பரீட்சை

| விடய இல. | பாடம் | வினாப்பத்திரத்தின் தன்மை நேரம் | உச்ச புள்ளி | சித்தியடைய பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | பொது அறிவும் உளச்சார்பும் | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2 | கனிய அளவை மற்றும் SLS 573 பயன்பாடு | 03 மணித்தியாலம் | 100 | 40 |

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் நடைபெறும்.
(ii) விண்ணப்பதாரிகள் விரும்பிய மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், பரீட்சையில் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தை பரீட்சையில் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.
(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும்.
நாட்டின் எந்தவொரு தபால் /உபதபால் அலுவலகத்திலும் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழன்று போகாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்துக்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

10.2 பாடவிதானம் :

பாட இல. 01 : பொது அறிவும் உளச்சார்பும்

| பாடவிதானம் | வினாக்களின் தன்மை |
|---|---|
| * இலங்கையின் புவியியல் வித்தியாசங்கள், வரலாறு, அரசியல், விளையாட்டு மற்றும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் (சர்வதேச ரீதியில் பெற்றுக்கொண்ட வெற்றிகளும் உள்ளடங்களாக)<br>* உலகில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள், பூகோள ரீதியில் இடம்பெற்றுள்ள பிரிவினைகள் பிரதான நகரங்கள். சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அவற்றின் செயற்பணிகள் | சுருக்க வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள் |

| தொடர் இல. | பாடவிதானம் | வினாக்களின் தன்மை |
|---|---|---|
| 1 | தரநியமங்கள் (SLS 573) ஐப் பயன்படுத்தி கனிய அளவைப் பத்திரங்களை தயார் செய்தல் | கட்டாயமான வினா |
| 2 | கனிய அளவைப் பட்டியல்களை தயார் செய்வது பற்றிய சிக்கல்கள் | |
| 3 | பிரதான நிர்மாணப் பணிகளுக்கான கனிய அளவைப் பட்டியல்களைத் தயார் செய்தல் | தொடர் இலக்கம் 03 - 09 வரையான 7 வினாக்களில் 4 வினாக்களை தெரிவு செய்து விடையளிக்க முடியும். |
| 4 | விலைமதிப்பு றையியல்களைப் பயன்படுத்தி விலைமதிப்பீடு செய்தல் | |
| 5 | விலைமனு ஆவணங்களைத் தயார் செய்தல் | |
| 6 | ஒப்பந்த நிபந்தனைகளை (CIDA/ SBD) பயன்படுத்தல் | |
| 7 | கொடுப்பனவுச் செயன்முறைக்கு கூட்டு அளவைகளைப் பெற்றுக்கொள்ளல் | |
| 8 | இடைக்கால மற்றும் இறுதிக் கணக்குகளைப் பரிசோதித்தல், ஒப்பந்த வித்தியாசங்கள் | |
| 9 | இருபரிமாண, முப்பரிமாண வரைபடங்கள் பற்றிய அறிவு | |

10.3 நேர்முகப் பரீட்சை : புள்ளி வழங்கப்படமாட்டாது என்பதுடன் தகைமைகளை பரிசீலிப்பது மாத்திரம் இடம்பெறும்.

11. **விண்ணப்பிக்கும் முறை** : விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கு அமைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை 8 1/ 2 × 12 (A4) அளவான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் 05 வரையான தலைப்புக்களை முதலாவது பக்கத்திலும் எஞ்சிய இலக்கங்களை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழிமூலத்தை தமது கைஎழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் தலைப்பு சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும்

தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்க முன்னர், அது பரீட்சை அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக உள்ளதா என்பது பற்றியும், சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும். உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மீள்பரிசீலனை செய்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2021.12.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சாரா/தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் கனிய அளவை உதவியாளர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.-**

(i) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை தமது திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிப்பது அத்தியாவசியமானதாகும்.

(ii) சகல வகையிலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும் போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

(iii) விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காத அபேட்சகர்கள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியுடன் உங்களின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவுமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரியாயின், உங்களது மேற்படி விபரங்களுடன், பெக்ஸ் மூலம் அனுமதிச்சீட்டின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்வதற்காக உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது பயனுள்ளதாக இருக்கும்.

(iv) அபேட்சகர்கள் பரீட்சை அனுமதிச்சீட்டில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பம் சான்றுப்படுத்திக் கொள்ளப்பட்ட அனுமதிச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

(v) அபேட்சகருக்கு பரீட்சை அனுமதிச்சீட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

12. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிச்சீட்டிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் ஊடாகவும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர், அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்தைச்

சேர்ந்த அலுவலர் ஒருவர் அல்லது பௌத்த விஹாரையொன்றின் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது பிற மத வழிபாட்டுத்தலமொன்றுக்குப் பொறுப்பான மதத் தலைவரொருவராகக் கருதக்கூடிய அந்தஸ்திலுள்ள ஒருவர் ஊடாக சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

13. **அபேட்சகரின் ஆள் அடையாளம்**.- பரீட்சை அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடைக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சை அபேட்சகர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்துக்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சைகள் மண்டபத்திற்குள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப அலுவலர்களுக்கு அபேட்சகரை இனங்காணக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

14. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் அவரினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர் கட்டுப்படுகின்றார். மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் அபேட்சகர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

15. பரீட்சைக்குத் தோற்றும் சகல அபேட்சகர்களினதும் பெறுபேறுகள், பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படும்.

16. இந்த ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கு அமைய அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17. பரீட்சை பெறுபேறு.- ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிக்கு குறையாதவாறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் திறமையின் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்ற பெறுபேறு அட்டை "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம், கொலன்னாவை" இற்கு பெற்றுக் கொடுக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல அபேட்சகர்களுக்கும், பெறுபேறுகளை தனிப்பட்ட வகையில் அனுப்பிவைக்கப்படும் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exam.gov.lk இணையத்தளத்தின் மூலம் பெறுபேறுகள் பகிரங்கப்படுத்தப்படும்.

18. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்.

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ,
2021, நவெம்பர் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சாரா/ தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தரம் III ஐச் சேர்ந்த கனிய அளவை உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

Open Competitive Examination Recruitment for the post of Management Assistant Non-Technical/ Technical Services Grade III Quantity Survey Assistant in the Department of Government Factory

| பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் |
|---|
| சிங்களம் 2<br>தமிழ் 3<br>ஆங்கிலம் 4 |
| (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)<br>இதனைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது. |

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-
.....................................................................................................................................
.....................................................................................................................................
(உதா. : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும், ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியாகவும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .....................................................................................
(உதா. : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) : .....................................................................................
.....................................................................................................................................

1.4 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
.....................................................................................................................................
.....................................................................................

1.5 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களம்/தமிழில்) :
.....................................................................................................................................
.....................................................................................

2.0 பரீட்சை அனுமதிச்சீட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
.....................................................................................................................................
.....................................................................................

3.0 3.1 பால்நிலை
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடுக.)

3.2 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :..........................................................................................

3.4 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :..........................................................................................

4.0 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5.0 கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6.0 கல்வித் தகைமைகள் :

6.1 க. பொ. த. (உ/த) பரீட்சை :
ஆண்டு :.....................  மொழிமூலம் :.....................
பரீட்சை இல. :..........................................................

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6.2 க. பொ. த. (சா/த) பரீட்சை :
ஆண்டு :.....................  மொழிமூலம் :.....................
பரீட்சை இல. :..........................................................

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6.3 தொழில்சார் தகைமைகள் : ..........................................................................................
..........................................................................................

6.4 அனுபவம் : ..........................................................................................
..........................................................................................

7.0 7.1 பரீட்சைக் கட்டணம் : .......................................
7.2 தபால்/உப தபால் அலுவலகம் :..................................................................................
7.3 பற்றுச்சீட்டு இலக்கம் :..........................................................................................
7.4 திகதி :..........................................................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும் என்பதுடன், அத்தொகையை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை உங்கள் வசம் வைத்திருக்கவும். |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளது என்றும், பரீட்சைக் கட்டணமாக ரூபா ............. தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்றும் தெரிவிக்கின்றேன்.

..................... ......................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

*__குறிப்பு__ : கையொப்பமிடுவதற்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரியொருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.*

***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :***

*நான் தனிப்பட்ட வகையில் அறிமுகமான திரு./திருமதி/செல்வி ................................................... என்பவர் ....................... .......... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.*

.............................
*திகதி*

...............................................
*சான்றுப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை*

*பெயர்* : ...............................
*பதவி* : ...............................
*முகவரி* : ...............................
*திகதி* : ...............................

***திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :***

i. *மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்களை பரிசோதித்துப் பார்த்தேன் என்றும்;*
ii. *அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் தோற்றியுள்ளார்/தோற்றவில்லை என்றும்;*
iii. *அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருக்கவில்லை என்பதனால் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இந்த விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்றும்;*
iv. *அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.*

* *பொருத்தமற்ற சொற்களை கீறிவிடுக.*

..................................................
*திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை*

*பெயர்* : ...............................
*பதவி* : ...............................
*முகவரி* : ...............................
*திகதி* : ...............................

*11-849*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*